**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C. No. 110-2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | நித்ய செல்வகுமாரி<br>(RW1 Cross) | Date | : | 07.10.2025 |
| Husband Name | : | ஜெயசீலன் | | : | |

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–**

1. நான் அங்கன்வாடி ஊழியராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். எனது பணி அரசு சார்ந்த பணியாகும். எனக்கு செம்பனார்கோவில் SBI பேங்கில் A/c. No. 20309214618 என்ற வங்கி கணக்கு உள்ளது என்றால் சரிதான். மசாஆ 1 ஆன காசோலை எனது வங்கி கணக்கின் காசோலை என்றால் சரிதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி காசோலையானது பணம் வசூலாகாமல் திருப்பப்பட்டது என்று புகார்தாரர் எனக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். நான் புகார்தாரரிடம் பணத்தை இதுவரை திருப்பி கொடுக்கவில்லை என்றால் நான் அவரிடம்பணம் எதுவும் வாங்கவே இல்லை. நான் பணத்தை யாரிடம் வாங்கினேன் என்றால் விமல் என்பவரிடம் வாங்கினேன். விமலிடம் பெற்ற கடனை அவரிடமே திருப்பி செலுத்திவிட்டேன். விமலிடம் என்பவரிடம் வாங்கியதற்கான ஆவணங்கள் ஏதேனும் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை.

2. இவ்வழக்கு காசோலைக்கும் விமல் என்பவருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும், நான் புகார்தாரர் இடம் தான் பணத்தை பெற்றுக்கொண்டு மேற்படி கடனுக்காக புகார்தாரரிடம் தான் காசோலையை கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் உண்மையிலேயே விமல் என்பவரிடம் கடன் பெற்று அந்த கடன் தொகையை திருப்பி கொடுத்திருந்தால் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், விமல் என்பவரிடம் கடன்

பெற்றதாகவும், அவரிடம் இந்த வழக்கு காசோலை கொடுத்ததாகவும் இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.